

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூன் 16, 2022 | புரட்சி 21 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00

## அரசியல் சட்டத்தின் மாண்புகளுக்கு எதிராக

# சனாதனப் பெருமைப் பேசுகிறார், ஆளுநர் ரவி!

***மோடி அமைக்கத் துடிக்கும் இந்து ராஜ்யத்தின் தூதுவராக தமிழக ஆளுநர் ஆர்.எஸ். ரவி, சனாதனப் பெருமையைப் பேசுவதோடு, இந்தியா இந்துக்களின் நாடு என்று அரசியல் சட்டத்தின் மாண்புகளைக் குலைத்து வருகிறார். ஆளுநர் பேச்சு அறிவியலுக்கும் அரசியல் சட்டத்துக்கும் எதிரானது. அவரது பேச்சுக்கு மறுப்பு:***

***ரிஷிகளும் முனிவர்களும் உருவாக்கியதே நமது தேசம் என்கிறார் ஆளுநர்.***

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி வருகைக்கு முன்பு இந்தியா என்ற தேசமே உருவாகவில்லை. மன்னர்கள்தான் பேரரசுகளாக சிற்றரசுகளாக ஆட்சி செய்து வந்தனர். கிழக்கிந்திய கம்பெனியும் அதற்குப் பிறகு வந்த பிரிட்டிஷ் காலனி ஆட்சியும் உருவாக்கியது 'இந்தியா'. சுதந்திரத்துக்குப் பிறகு சமஸ்தானங்களை விரட்டி இந்தியாவுடன் சேர்த்தார்கள். சுதந்திரத்துக்கு முன்பு பாகிஸ்தான் பிரிந்து சென்றது. சுதந்திர இந்தியா தனக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொண்டது. அந்த சட்டப்படி பதவிக்கு வந்தவரே ஆளுநர்.

ரிஷிகளும், முனிவர்களும் எந்த தேசத்தை உருவாக்கினார்கள்? அவர்கள் உருவாக்கியதாகப் புராணங்களில் எழுதப்பட்டுள்ள கற்பனைகளை வரலாறுகளாக திரிக்கலாமா? இப்போது ஆளுநர், ரிஷிகள், முனிவர்கள் - என்ற வேதகால பாரதத்துக்கு இந்தியா திரும்ப விரும்புகிறாரா?

- **எது சனாதன தர்மம்? ஆளுநர் விளக்குவாரா?**

***சனாதன தர்மத்தின் ஒளியால் உருவானது இந்தியா என்கிறார் ஆளுநர்.***

'சனாதன தர்மம்' என்றால் என்ன என்று ஆளுநர் விளக்குவாரா? சனாதன தர்மம் என்ற பெயருக்குள் பதுங்கி நிற்பது 'வேத தர்மம்' என்பதே உண்மை. அப்படி வெளிப்படையாப் பேசினால் பெரும் பான்மையான பார்ப்பனரல்லாத மக்கள் அதைப் புறக்கணிப்பார்கள் என்பதால் 'சனாதன தர்மம்' என்ற போர்வைக்குள் பதுங்கிக் கொள்கிறார்கள். அது 'வேத தர்மம்' தான் என்பதற்கான சான்றுகளை நாம் வைக்கிறோம்.

மனுஸ்மிருதி முதல் பகுதியில் 22 மற்றும் 23 ஸ்லோகங்களில் சனாதன தர்மம் பற்றி குறிப்பிடுகிறது. இதற்கு குல்லுக பட்டர் - இவ்வாறு விளக்கம் தருகிறார்:

"சனாதனம் என்ற சொல், 'எக்காலத்திலும் எப்போதும் இருந்து வருவது' என்று பொருள். எப்போதும் இருந்து வருவது வேதம் தான். மனிதச் செயலுக்கு அப்பாற்பட்டது 'வேதம்' என்று மனுதர்மம் கூறுகிறது. அந்த வேதங்கள் பரமாத்மா வுடன் கலந்து போன பிரம்மாவின் நினைவில் பாதுகாக்கப்பட்டவை. அந்த வேதங்களைத்தான் கல்ப காலத் தொடக்கத்தில் பிரம்மா அக்னி, வாயு, சூரியன் ஆகியவற்றின் மூலமாக வெளிப்படுத்தினார். வேதத்தை ஆதாரமாகக் கொண்ட இந்த கருத்து பற்றி எவரும் கேள்வியே கேட்கக் கூடாது. ரிக் வேதம் - அக்னியிடமிருந்தும், யஜுர் வேதம் - வாயுவிட மிருந்தும், சாம தேவதம் - சூரியனிடமிருந்தும் 'வெளிப்பட்டன'. எப்போதும் இருந்தே வரும் வேத தர்மம், தான் சனாதன தர்மம்."

சரி; 'கல்ப காலம்' என்பது என்ன? உலகம் தோற்றுவிக்கப்பட்ட 'சிருஷ்டி' காலத்திலிருந்து பிரபஞ்சம் அழியக் கூடிய பிரளய காலம் வரை கல்ப காலம் என்று இந்து காலண்டர் (பஞ்சாங்கம்) கூறுகிறது.

சரி; சனாதன தர்மமான வேத தர்மம் என்ன கூறுகிறது?

ரிக் வேதத்தில் 'புருஷ சுக்தம்' என்ற பிரிவு பிராமணன் - பிர்மாவின் நெற்றியிலும், சூத்திரன் - காலிலும் பிறந்தவன் என்று கூறுகிறது. சூத்திரன் - இழிவானவன் என்று 7 வகை அடிமைத்தனத்தை வரையறுக்கிறது மனு சாஸ்திரம். அதில் ஒன்று 'பிராமணர்களின் வைப்பாட்டி மகன்' என்பதாகும்.

ரிக் வேதம் கூறும் மற்றொரு சுலோகத்தை சுட்டிக் காட்டுகிறோம்:

"தெய்வாதீனம் ஜகத் சர்வம்  
மந்த்ரா தீனம்து தெய்வதம்  
தன் மந்திரம் பிரம்மணாதீனம்  
தஸ்மத் பிரம்மணம் பிரபு ஜெயத்"  
(சுலோகம் 62; பிரிவு 10)

இதன் பொருள் : உலகம் கடவுளுக்குக் கட்டுப் பட்டது; கடவுள் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டவர்; மந்திரம் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டது; பிராமணர்களே நமது கடவுள்.

சுருக்கமாகக் கூறினால், சனாதன தர்மம் என்பது பிராமணர்களை கடவுளாக வணங்க வேண்டும் என்பது தான். அந்த தர்மத்தை ஒரு ஆளுநர் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைக்கு எதிராகப் புனிதமாகவும் ஒளிச்சுடராகவும் போற்றிப் பெருமைப்படுவது பச்சைப் பார்ப்பனியமல்லவா?

வடநாட்டில் இப்படிப் பேசினால் பொருள் புரியாமல் அதற்கு தலையாட்டுவோர் கிடைக்கலாம்; இது தமிழ்நாடு, பெரியார் மண்; வேத தர்மம் - சனதான தர்மத்தின் வண்டவாளங்களை தண்டவாளம் ஏற்றி அலசி ஆராய்ந்து வைத்துள்ள மண். ஆளுநர் 'பிராமண பஜனை' பாட வேண்டாம்.

மறுப்பவர்கள் சனதான தான தர்மத்துக்கு வேறு விளக்கம் இருந்தால் சொல்லட்டும்; சொல்லத் தயாரா?

"சோமநாத் கோயில் சொத்துக்களை அழித்து கந்தகார் பெஷாவர் நகரங்களை கஜினி முகம்மது உருவாக்கினான். அந்த நகரங்கள் பிறகு அமெரிக்காவால் தாக்கப்பட்டன. இதிலிருந்தே சனாதன தர்மத்தின் வலிமையை புரிந்து கொள்ளலாம்" என்கிறார் ஆளுநர் ரவி

அதாவது சனாதன தர்மத்தின் வேத சக்தியை அழிக்கவே முடியாது என்று கூற வருகிறாரா ஆளுநர் ரவி?

அமெரிக்காவால் தாக்கப்பட்ட பெஷாவர், இப்போது பாகிஸ்தானில் இருக்கிறது. கந்தகார், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பிடியில் இருக்கிறது. வேத சக்தி நிறைந்த சனாதன தர்மம், அதை ஏன் இந்தியாவுக்குள் கொண்டு வரவில்லை?

சீனாவிடம் பறிகொடுத்திருக்கும் அருணாச்சல பிரதேச பகுதிகளை சனாதன சக்தி இந்தியாவிற்குள் தானே கொண்டு வந்து சேர்த்து விடுமா? ஆளுநர் பதில் சொல்வாரா?

# அரசு தலையீடு கூடாதாம்; நீதிமன்றம் தலையிடலாமாம்!

2022ஆம் ஆண்டிலும் இப்படி ஒரு அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது. தில்லை நடராசன் கோவிலில் முறைகேடுகள் நடப்பதை ஒட்டி அதிகாரிகள், கணக்கு வழக்குகளை சரி பார்க்க சென்ற போது, "அதை கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இல்லை" என்று தீட்சதர்கள் அவர்களை திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அறநிலையத்துறைக்கும் தில்லை கோவிலுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. அந்த சட்டத்திலிருந்து, உச்சநீதிமன்றத்தின் வழியாக நாங்கள் விதி விலக்கு பெற்றுவிட்டோம். எனவே உங்களிடம் நாங்கள் கணக்குகளை காட்ட வேண்டிய அவசியம் இல்லை. என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

இந்தக் கோவில் தீட்சதர்களால் கட்டப்பட்ட கோவிலா ? நிச்சயமாக இல்லை. கோவிலுடைய தல புராணமே கூறுகிறது, "இந்தக் கோவிலைக் கட்டியவன், சிம்ம வர்மன் என்கிற மன்னன். நடராசன் அந்த மன்னனின் கனவில் தோன்றி, கோவிலைக் கட்டுமாறு கூறியதாகவும், அதனடிப்படையில் அவன் கோவிலைக் கட்டியதாகவும், நடராசனே சிம்ம வர்மன் என்ற பெயரை இரணிய வர்மன் என்று மாற்றியதாகவும்" அவர்களே தல புராணத்தை எழுதி வைத்துள்ளார்கள். அதற்குப் பிறகு இந்தக் கோவிலை பராமரித்தவர்களெல்லாம் சோழ மன்னர்கள். பராந்தக சோழன் தங்க கூரை போட்டான். விக்கிரம சோழன் நான்கு வீதிகளையும் செப்பனிட்டு தேரை ஓட்டினான். குலோத்துங்க சோழன் சிற்றம்பலத்திற்கு தங்க கூரை போட்டான். எனவே, சோழ மன்னர்களின் பராமரிப்பில் தான் கோவில் இருந்துள்ளது. பக்தர்களின் காணிக்கையில் தான் இந்த கோவில் இப்போதும் செயல்பட்டுக் கொண்டுள்ளது. கோவிலுக்குள் வழிபாடு செய்ய வந்த தீட்சதர்கள் கோவிலே தங்களுக்கு சொந்தம் என்று உரிமை கொண்டாடி, அறநிலையத்துறை இதில் தலையிட முடியாது என்கிறார்கள்.

உச்சநீதிமன்றத்தில், அறநிலையத்துறையின் கீழ் இந்த கோவில் வராது என்று இவர்கள் எந்த அடிப்படையில் வாதாடினார்கள் என்பது முக்கியமான கேள்வி. "நாங்கள் இந்து என்ற மதத்தின் கீழ் வரக்கூடியவர்கள் அல்ல. பொது தீட்சதர் தனிப் பிரிவினர். எனவே இந்து அறநிலையத்துறை சட்டத்தின் கீழ், இந்து மதத்தினருடைய தொடர்பில்லாத தனிப்பிரிவினரை சேர்க்கக் கூடாது" என்ற வாதத்தின் படி தான் அறநிலையத்துறை சட்டத்திலிருந்து விதிவிலக்கு பெற்றிருக்கிறார்கள். மற்றொரு வழியில் கூற வேண்டுமானால், "இந்து மதத்திற்க்கும் எங்களுக்கும் தொடர்பில்லை" என்று கூறுகிறவர்கள் தான் தீட்சதர்கள்.

மற்றொரு செய்தி, அரசு, கோவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது, வெளியேற வேண்டும் என்று கூக்குரல் போடுகிற புரோகிதப் பார்ப்பனக் கூட்டம், அரசு அமைப்புகளில் ஒன்றான நீதி மன்றங்களின் தீர்ப்புகளை வைத்து தான் சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. உச்சநீதிமன்றம் தருகின்ற தீர்ப்பு மட்டும் இவர்களுக்கு இனிக்குமா ? உச்ச நீதிமன்றம் மட்டும் இதில் தலையிடலாமா ? உச்சநீதிமன்றம், கோவில் தீட்சதர்களுக்கு சொந்தமில்லை என்று கூறினால் அப்போது என்ன செய்வார்கள் ? இந்த கேள்விகளுக்கெல்லாம் விடை கண்டாக வேண்டும்.

அறநிலையத்துறை சட்டத்தின் பிரிவு 29,30,31 பிரிவுகளின் படி, கோவிலில் சில கணக்குகளை பராமரிக்கக் கூடிய அவசியம் எங்களுக்கு கிடையாது. நாங்கள் பராமரிக்க மாட்டோம். அதில் எங்களுக்கு விதிவிலக்கு உண்டு என்றும், கூறி

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## எல்லை மீறும் பா.ஜ.க. சங்பரிவாரங்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

உலகின் இஸ்லாமிய நாடுகளோடு இந்திய உறவுகளை கடுமையாகப் பாதிக்கக் கூடிய வெறுப்புப் பேச்சுகளைப் பேசிய பா.ஜ.க.வின் அதிகாரபூர்வ பேச்சாளர் இருவர் மீதும் ஒன்றிய ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கட்சியிலிருந்து நீக்கிவிட்டு ஏதோ அவர்கள் கட்சியோடு தொடர்பே இல்லாத சிறு குழு என்பது போல் நாடகமாடுகிறது. இந்தியா முழுதும் கொதித்து எழுந்து போராடும் இஸ்லாமியர்கள் மீது கடும் அடக்குமுறைகள், தடியடிகள், துப்பாக்கி சூடுகளை நடத்துவதோடு, உ.பி. பா.ஜ.க. ஆட்சி ஜனநாயக வழியில் போராடியவர்களின் வீடுகளை புல்டோசர் வைத்து இடித்துத் தள்ளுகிறது. ஜார்கண்டில் அப்பாவியான 16 வயது முஸ்லீம் இளைஞனைப் பிடித்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பார்க்க முடியாத அளவுக்கு நெஞ்சம் பதை பதைக்கிறது.

மதங்களை விமர்சிக்கவே கூடாதா என்று பகுத்தறிவு அறிவியல் வெளிச்சத்தில் கேள்வி கேட்டால் விமர்சிக்கும் உரிமை உண்டு என்பதே நமது உறுதியான கருத்து. அதே நேரத்தில் இஸ்லாமிய வெறுப்புணர்வோடு ‘இந்துத்துவா’ அரசியல் பார்வையில் பகைமையை உருவாக்கும் மதவிமர்சனம் – பகுத்தறிவுக் கண்ணோட்டமாகாது; பாசிசக் கண்ணோட்டமாகும். இந்து மதத்தை எவரும் விமர்சிக்கவே கூடாது. ஆனால் பிற மதங்களை அவர்கள் போற்றும் தூதுவர்களை வணங்கும் இறைவனை மட்டும் விமர்சிப்போம் என்ற சார்பு நிலை மதவெறிக்குக் களம் அமைப்பதே தவிர மதம் கடந்த மானுடப் பார்வையல்ல.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வினர் அண்மைக் காலமாக ஏதோ தமிழக ஆட்சியைப் பிடிக்க அவர்கள் நெருங்கி விட்டதாகக் கற்பனை செய்து கொண்டு நடத்தி வரும் அடாவடி அரசியல் எல்லை மீறிக் கொண்டிருக்கிறது. எச். ராஜா என்ற மனுவாதி காவி உடை மீது கை வைத்தால் ஒரு தி.மு.க.காரன் கூட நடமாட முடியாது என்று வீண் சவால் விடுகிறார்.

தருமபுரம் ஆதீனம் மற்றொரு ‘எச். ராஜா’ ஆக மாறி, தி.மு.க. எதிர்ப்பு அரசியலை மேடைப் பேச்சாளர் போல பேசத் தொடங்கி யிருக்கிறார். வரவு செலவுக் கணக்கு கேட்கச் சென்ற அறநிலையத் துறை அதிகாரிகளை, சிதம்பரம் நடராசர் கோயில் தீட்சதர்கள், ‘சாவி இல்லை’ என்று கூறி திமிரோடு திருப்பிஅனுப்புகிறார்கள். அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு, துறையை இவ்வளவு அவமானப்படுத்திய பிறகும் தீட்சதர்களிடம் மன்றாடிக் கொண் டிருக்கிறாரே தவிர, துணிவுடன் தட்டிக் கேட்க முன் வரவில்லை. இத்தனைக்கும் முதல் நாள் அமைச்சர் சட்டையில்லாமல் தீட்சதர்களைச் சந்தித்து அவர்களிடம் கணக்குகளைக் காட்டுமாறு பணிவுடன் மன்றாடுகிறார். தில்லைக் கோயில் சம்பிரதாயப்படி ‘சட்டை நீக்கம்’ சம்பிரதாயமல்ல என்றாலும், அமைச்சர் சட்டை இல்லாமலே போய் தனது தீவிர பக்தி விசுவாசத்தைக் காட்டினாலும் தீட்சதர்கள் மதிக்கத் தயாராக இல்லை.

அறநிலையத் துறை அமைச்சர் ஒரு தனி மனிதரல்ல; ஒரு திராவிட இயக்கத்தின் அமைச்சரவையில் இடம் பெற்றவர்.

கோயிலுக்கு பக்தர்கள் தானமாக வழங்கும் பசு மாடுகளை கோயில் நிர்வாகம் பராமரிக்க வேண்டும் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. மாறாக ‘பசு மடம்’ (கோ சாலை) ஒன்றை உருவாக்கி, அனைத்து பராமரிக்க முடியாத பசு மாடுகளையும் ஒரே இடத்தில் வைத்து அரசு செலவில் ‘பசுப் பாதுகாப்பு’ ஏற்பாடுகளை செய்வோம் என்று அறநிலையத் துறை செயல்படுவது பார்ப்பனர்களை திருப்திப்படுத்து வதற்காகவா என்ற கேள்வியை கேட்க வேண்டியிருக்கிறது.

அமைச்சர் மனோ தங்கராஜ் – கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர் வடம் பிடித்து ஒரு அமைச்சர் என்ற முறையில் துவக்கி வைக்கப் போகிறார்; பா.ஜ.க.வினர் அமைச்சர் இந்துவாக மாறி விபூதி குங்குமம் வைத்துக் கொண்டு தேர் இழுக்க வரவேண்டும் என்று போராட்டம் நடத்துகிறார்கள்.

ஒரு அமைச்சரை வைத்து மக்களின் மத ஒற்றுமையைக் குலைக்கும் போராட்டத்தை நடத்துகிறார்கள். கோயிலுக்குள் எரியும் மின்சார விளக்குகள் கிறிஸ்தவர் கண்டுபிடிப்பு தான். அதற்காக மின்சாரமே கோயிலுக்குள் வேண்டாம் என்று கூறுவார்களா?

தி.மு.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஆற்காடு வீராசாமி, இறைவனடி சேர்ந்து விட்டதாக அண்ணாமலை பொறுப்பின்றி பேசி, பிறகு வருத்தம் தெரிவிக்கிறார்.

கச்சச் தீவு பிரச்சினையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் மன்னிப்புக் கேட்டுவிட்டு வந்தால், பிறகு மோடியிடம் அழைத்துச் சென்று தானே கச்சத் தீவை மீட்டுத் தருவதாக திமிர் பேச்சுப் பேசுகிறார்.

இத்தனைக்கும் அறநிலையத் துறை பெயரில் மோசடி செய்தவர்கள், போதைப் பொருள்கள் விற்றவர்கள், பாலியல் துன்புறுத்தல் செய்தவர்கள் என்று சமூக விரோதிகள் பட்டியலில் ஒவ்வொரு நாளும் பா.ஜ.க.வினர் பெயர்கள் செய்திகளாக வந்து கொண்டே இருக்கின்றன.

தமிழ்நாடு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது அதற்கான துணிவு அவர்களிடம் கிடையாது என்பதுபோல பா.ஜ.க.வினரிடம் ஒரு கருத்து உருவாக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு மென்மையானப் போக்கைக் கைவிட்டு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தமிழ்நாடு மதவெறிக்கு பலியாகி விடக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் இதைக் கூறுகிறோம்.

## நீண்டகாலமாக தமிழ்நாடு ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்கும் சட்ட மசோதாக்கள்

1) தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் (திருத்தம்) மசோதா, 2020
(வேந்தருக்கு பதிலாக ஆய்வு மற்றும் விசாரணை அதிகாரத்தை அரசாங்கத் திற்கு வழங்குதல்)

2) தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம் (திருத்தம்) மசோதா, 2020
(ஆய்வு அதிகாரத்தை அரசாங்கத் திற்கு வழங்குதல்)

3) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாவது திருத்தம்) சட்டம், 2022.
(சில விதிகளை திருத்தவும், பதவிக் காலத்தை குறைக்கவும்)

4) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2022
(உயர்கல்வித் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாநில பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்)

5) சென்னை பல்கலைக்கழக (திருத்த) மசோதா, 2022
(பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் நியமிப்பதற்கும், நிதிச் செயலாளரை பல்கலைக்கழகத் தின் சிண்டிகேட் உறுப்பினராக சேர்ப்பதற்கும்)

6) தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக் கழக மசோதா, 2022

(சென்னைக்கு அருகில் தனி சித்த பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். இந்திய மருத்துவ முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்)

7) தமிழ்நாடு நகரம் மற்றும் நாடு திட்டமிடல் (இரண்டாம் திருத்தம்) மசோதா, 2022
(மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஓசூர் நகர்ப்புற ஒருங்கிணைப்பு)

8) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தம்) மசோதா, 2022 (பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரை நியமிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்)

9) தமிழ்நாடு சம்பளம் வாங்குவதில் (திருத்தம்) மசோதா, 2022.
(ஆங்கிலோ இந்திய சமூகம்)

10) தமிழ் பல்கலைக்கழக (திருத்த) மசோதா, 2022

11) தமிழ்நாடு அடுக்குமாடி குடி யிருப்பு உரிமை மசோதா, 2022

12) தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகம் சென்னை (திருத்தம்) மசோதா, 2022
(துணைவேந்தரை நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்)

13) தமிழ்நாடு மதிப்புக் கூட்டப்பட்ட வரி (திருத்தம்) மசோதா, 2022

14) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) மசோதா, 2022

15) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (மூன்றாவது திருத்தம்) மசோதா, 2022

16) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் (நான்காவது திருத்தம்) மசோதா, 2022

17) தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் (திருத்தம்) மசோதா, 2022

18) தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழக (திருத்த) மசோதா, 2022
(பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குதல்)

19) தமிழ்நாடு ரத்துச் சட்டம் 2022 (காலாவதியான மற்றும் தேவையற்ற சட்டங்களை ரத்து செய்ய)

20) தமிழ்நாடு தடுப்புச் சட்டத்தில் திருத்தம் (தங்களின் நெருங்கிய உறவினர்களின் மரணத்தில் கலந்து கொள்வதற்காக அவர்களை தற்காலிகமாக விடுவிப்பது தொடர்பாக மாவட்ட அளவில் உள்ள ஒரு அதிகாரிக்கு, அரசாங்கத்தின் அதிகாரத்தை வழங்குதல்)

21) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு (திருத்தம்) மசோதா, 2022
(உள்கட்டமைப்பு மேம்பாடுகளில் துறையின் பங்களிப்பை ஊக்குவித்தல்)

(இதில் 19 மசோதாக்கள் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டவை)

## போராடாமல் இருக்க முடியாது



கடவுள், மத உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும், சமத்துவ வாழ்விற்கும், இவ்வளவு இடையூறுகளுக்கும், தாரதம்மியங்களுக்கும் இடந்தராதிருக்குமானால் – நான் அவைகளைப் பற்றி இவ்வளவு கவலை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடவுள், மதப் பிரச்சாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்துபவர்களின் பரிதாபத்திற்காகவாவது நான் சும்மா விட்டுவிடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில், ஒரு மனிதன் அனாவசியமாய் – அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக, பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் அதனால் பாமர மக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப் பார்க்கும்போது, உண்மையான உணர்ச்சியுள்ளவன் அதை ஒழிக்கப் போராடாமல் இருக்க முடியாது.

குடி அரசு – 20.11.1932

## முனைவர் ஜெயரஞ்சன் கேள்வி

# திராவிட மாடலை எதிர்ப்பவர்கள் ஆரிய மாடலை ஆதரிக்கிறோம் என்று கூறத் தயாரா?

***திராவிட மாடல் பயிற்சிப் பாசறை தொடக்க விழா 5.6.2022 அன்று கலைஞர் அரங்கில் நடந்தது. திட்டக் குழு துணைத் தலைவர் முனைவர் ஜெயரஞ்சன் பங்கேற்று ஆற்றிய உரையின் தொடர்ச்சி:***

அடுத்ததாக நீர்ப் பாசனத்தை எடுத்துக் கொண்டால், குடிநீராக இருக்கட்டும்; பாசனத் திற்கான நீராக இருக்கட்டும்;

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் குடிநீர் வடிகால் வாரியத்தைத் தொடங்குகிறார்.

ஏனென்றால், அன்று குடிநீர் கிடைப்பதே மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது.

எங்கெல்லாம் குடிநீர் தட்டுப்பாடு இருந்ததோ, ஆழ்குழாய் கிணறுகளின் மூலமாக டாங்குகளில் தண்ணீர் ஏற்றி, எல்லோருக்கும் குடிக்க தண்ணீர் கிடைக்க வழி செய்தார்.

இதில் ஒரு சிக்கல் என்னவென்றால், எல்லா ஊர்களிலும் தண்ணீர் ஒரே மாதிரியாக இருக்காது. சில ஊர்களில் உப்பாக இருக்கும், சில ஊர்களில் உவர்ப்பாக இருக்கும். கிடைக்கின்ற தண்ணீரை வைத்துக் கொண்டு, காலத்தை ஓட்ட வேண்டியது தான்.

அன்றைய காலகட்டத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர், தற்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள்தான்.

முதலமைச்சரும், உள்ளாட்சித் துறை அமைச்சரும் சேர்ந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இராமேஸ்வரம் எங்கே இருக்கிறது - திருச்சி எங்கே இருக்கிறது?

திருச்சியிலிருந்து பைப் லைன் போட்டு, பம்ப் செய்து, போகிற ஊர்களுக்கெல்லாம் நல்ல குடிதண்ணீர்தான்.

சமத்துவத்தை நிலைநாட்டவேண்டும் என்று சொன்னால், நமக்கு நேரிடை வரி விதிக்கும் அதிகாரம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சிறப்பாக செயல்பட முடியும்.

வரி விதிக்கும் முறையில் இரண்டு முறை இருக்கின்றன.

ஒன்று, மறைமுக வரி விதிப்பு - இன்னொன்று நேரிடை வரி விதிக்கும் முறை.

நேரிடை வரி விதிக்கும் முறை என்ன வென்று சொன்னால், யாருக்கு வரி செலுத் தும் திறன் இருக்கிறதோ, அவர்களிடம் வரியை வாங்கி, இல்லாதவர்களுக்குக் கொடுப்பது.

எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கப்பட்ட ஒரு அதிகாரம் என்னவென்றால், நேரடி வரி விதிக்கும் முறை - ஒன்றுக்கு மட்டும்தான் உண்டு. அது என்னவென்றால், வேளாண் துறையிலிருந்து வருகின்ற வருமானத்திற்கு வரி விதிக்கும் உரிமைதான்.

தமிழ்நாட்டில் மின்சார இணைப்பு இல்லாத கிராமமே கிடையாது என்ற ஒரு நிலையை உருவாக்குகிறார். இந்தத் தொழில்நுட்பத்தால், இலவச மின்சாரத்தை



வழங்கினார். இந்த முறையால், விவசாயிகள் தங்கள் உற்பத்தியை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அடுத்ததாக போக்கு வரத்து -

வட மாநிலங்களுக்குச் சென்று வந்தவர்களுக்குத் தெரியும் - இங்கே இருப்பதுபோன்று வேறு எந்த மாநிலத்திலும் போக்குவரத்து வசதிகள் கிடையாது.

கிராமப்புற சாலைகள் என்ற ஒரு அணியை ஏற்படுத்தி, இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில், பேருந்துகள் இயங்குகின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண் டிருக்கிறது என்றால், அது தலைவர் கலைஞர் அவர்களால்தான்.

அதனுடைய தொடர்ச்சிதான் தற் பொழுது பெண்களுக்கு இலவச பேருந்து பயணம்.

> *இந்தியாவிலே மாநில அரசு குடிநீர் வாரியம் தொடங்கியது கலைஞர் ஆட்சியில் தன். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், வருமான இலக்கு இல்லாமல் அனைவருக்கும் ரேஷன் கார்டு திட்டங்களை அமுலாக்கியதும் தமிழ்நாடு தான் - என்றார் முனைவர் ஜெயரஞ்சன்.*

அடுத்ததாக கல்வி,

கல்வியில் இட ஒதுக்கீடு மிகப் பெரிய ஒரு மாற்றத்தை உருவாக்கியது.

தமிழ்நாடு இன்றைக்குப் பொருளா தாரத்தில் இரண்டாவது மாநிலமாக இருக்கிறது என்று சொன்னால், இதை சாத்தியப் படுத்தியது நம்முடைய இருக்கும் இயற்கையான வளங்கள் அல்ல.

அதற்குக் காரணம், கல்விதான். மக்களை அதற்குத் தயார்படுத்தியதுதான்.

கல்வியை முன்பு 3 சதவிகித ஆட்கள்தான் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் படித்தால் மட்டும் பொருளாதாரத்தில் இரண்டாவதாக வந்துவிட முடியுமா?

கல்வி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காக இட ஒதுக்கீடு கொள்கையை தொடர்ந்து செய்ததுதான்.

பிற்படுத்தப்பட்டவர்கள் பிரிவிலேயே, யார் எல்லாம் வாய்ப்பு பெறாமல் இருக்கிறார்கள் என்று கண்டறிந்து, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று தனிப் பிரிவாக ஆக்கினார்.

எஸ்.சி., பிரிவில் இட ஒதுக்கீடு என்றால், அந்தப் பிரிவுக்குள் யார் வர முடிய வில்லையோ, அவர்களுக்குத் தனியாக அருந்ததியார் பிரிவு என்று பிரித்தார்.

அதன் காரணமாக அனைவருக்கும் கல்வி கிடைத்ததினுடைய பலன்தான், இன்றைக்கு பொருளாதாரத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பது.

தமிழ்நாட்டில் மட்டும்தான் சமுதாயத் தினுடைய அனைத்துப் பிரிவில் இருந்தும் கல்வியைப் பெற்று உலகம் முழுவதும் இருக்கிறார்கள்.

ஒரு பண்பட்ட ஜனநாயகமாக மாறவேண்டும் என்று சொன்னால், குடும்பம் மாறவேண்டும். குடும்பத்தில் ஆண் - பெண் இருக்கிறார்கள் என்றால், ஆண்களுக்கு மட்டும்தான் சொத்தில் பங்கு உண்டு என்ற நிலையை மாற்றி, பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்ற நிலையைக் கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

என்றைக்கும் கலைஞர் அவர்கள் நான் வெற்றி அடைந்துவிட்டேன் என்று சொன்னது கிடையாது.

ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வரும் பொழுது, ஒவ்வொன்றையும் செய்து கொண்டே இருந்தார்.

அதேபோன்று, இன்று முதல்வர், திராவிட மாடல் அரசு என்று சொல்லும்பொழுது, அதை எதிர்த்து ஆளாளாளுக்கு எதிர்த்து சொல்கிறார்கள். பரவாயில்லை சொல்லி விட்டுப் போகட்டும்; அது நமக்கு நல்லது தான்.

முதலில் அவர்களை அது எரிச்சல் படுத்துகிறது; இரண்டாவது அதை நீ என்கவுண்டர் செய்துதான் ஆகவேண்டும்.

திராவிட மாடல் என்று நான் சொல்கிறேன் -

நீ ஆரிய மாடல் என்று சொல்கின்ற தைரியம் இருக்கிறதா?

இதற்குப் பதில் புதிதாக ஒன்றை சொல்கிறார்கள் - தமிழ் மாடலாம்.

தமிழன் ஆட்சியில் இருந்தான். ஆனால், அவன் வைத்த கொள்கை என்ன?

சமூகநீதி.

அந்தக் கொள்கை யாருடையது?

திராவிட இயக்கத்திற்குச் சொந்தமானது.

திராவிட மாடல் என்று சொல்வாயா? தமிழ் மாடல் என்று சொல்வாயா?

நமக்கு அந்தப் பெருமை வந்துவிடக் கூடாதாம்.

அதற்குப் பிறகு ஒருவன் வந்தான், இராமானுஜர் எல்லாம் இதில் சேர்ந்தவர் தான் என்றான்.

வரட்டும் - யார் வரவேண்டாம் என்கிறோம்.

இதுதான் பாதை - இந்தப் பாதையில் எல்லோரும் வாருங்கள் என்று நாங்கள் சொல்கிறோம்.

தாராளமாக வாருங்கள் - பயணிப்போம் - அருமையான ஒரு சமுதாயத்தைக் கட்டமைப்போம்.

அந்தப் பாதை என்பது மளிகைக் கடை பட்டியல் போன்று முடிந்துபோன விஷயமல்ல. தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டிய பணியாகும்.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மருத்துவர்கள் தமிழரசி–அ.கிருபாகரன் ஜாதி மறுப்பு மணவிழா



கழகத் தோழர் சி.சிகாமணி - ச.மோகனம்பாள் இணையரின் மகள் மருத்துவர் சி.தமிழரசி - மருத்துவர் அ.கிருபாகரன் ஆகியோரது இணையேற்பு நிகழ்வு 08.06.2022 அன்று மாலை 7 மணியளவில், வேப்பேரி ரித்திங்டன் சாலையில் உள்ள YMCA கட்டடத்தில் நடைபெற்றது.

புத்தர் கலைக்குழுவின் பறை இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, கோவன் தலைமையில் மக்கள் கலை இலக்கிய கழக மைய கலைக்குழுவின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்விற்கு, மக்கள் அதிகாரம் ப.வினோத் வரவேற்பு கூறினார். சேத்துப்பட்டு க.இராசேந்திரன் முன்னிலை வகித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று வாழ்க்கை இணையேற்பை நடத்தி வைத்தார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் தொல்.திருமாவளவன், கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர், சமூகநீதி கண்காணிப்புக் குழு தலைவர் சுப.வீரபாண்டியன், தமிழ்நாடு தலைமை செயலக SC/ST நலச்சங்கம் மீனலோசனி, ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், மக்கள் அதிகாரம் மாநில பொருளாளர் காளியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக ச.தனசேகரன் நன்றி கூறினார்.

# தோழர்தமிழரசு நினைவேந்தல்



பெரியார் தொண்டர், கழக களப்பணியாளர் கோ.தமிழரசு இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு 11.06.22 அன்று காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

மயிலாப்பூர் பெரியார் படிப்பகத்தில் அறிவரசுவின் நினைவுகள் பகிரப்பட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டு அறிவரசு படத்திற்கு கழகத் தோழர் இரண்யா மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து 9:30 மணியளவில் இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், அறிவரசு படத்திற்கு மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வுகளில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், மாவட்டத் தலைவர் வேழ வேந்தன், மாவட்ட செயலாளர் இரா.உமாபதி உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளை திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். இப்போது சற்று கீழே இறங்கி வந்து, உரிய குழுவை அமைத்தால், அந்தக் குழுவின் முன், எந்த கணக்கை கேட்கிறீர்களோ அந்தக் கணக்கை மட்டும் சமர்ப்பிக்கத் தயார் என்று தீட்சதர்கள் கூறியிருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

1997ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில், நீதிபதி வெங்கடாசலய்யா, கோவிலில் முறைகேடு நடப்பதை ஒப்புக் கொண்டு அதிகாரிகளை நியமிக்கலாம் என்றத் தீர்ப்பை வழங்கினார். பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே இந்தியாவில் முதல் நீதிபதியாக இருந்த முத்துச்சாமி அய்யர் கூட இந்தக் கோவில் தீட்சதர்களுக்கு உரிமையானது அல்ல என்ற தீர்ப்பை வழங்கி இருக்கிறார். இருந்தாலும் நாங்கள் இந்து மதத்தோடு தொடர்புடையவர்கள் அல்ல தனிப்பிரிவினர் என்று கூறி அந்த சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற்றுக் கொண்டு மன்னர்கள் கட்டிய கோவிலை தங்கள் வசமாக்கிக் கொண்டு பக்தர்கள் காணிக்கையை தங்கள் காணிக்கையாக்கிக் கொண்டு கோவிலை சூறையாடிக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் கணக்கு வழக்குகளை அரசிடம் தர முடியாது என்று மறுக்கிறது.

தேசிய வங்கிகளில் பணியாற்றுகிற அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு இந்த வங்கி எங்களுக்குத்தான் சொந்தம் என்று கூறினால் அதை நாம் ஒப்புக்கொள்ள முடியுமா ? தொடர் வண்டித் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகளும், பணியாளர்களும் சேர்ந்து கொண்டு இந்த தொடர்வண்டித் துறையே எங்களுக்குத் தான் சொந்தம். அரசு தலையிட முடியாது, என்று சொன்னால் ஒப்புக் கொள்ள முடியுமா ? ஆனால், பக்தி என்று வந்துவிட்டால், பார்ப்பனர் என்று வந்து விட்டால், எதையும் கூற முடியும். இந்த தேசமே எங்களுக்குத்தான் சொந்தம். சூத்திரர்கள் அனைவரும் வெளியேறுங்கள் என்று கூறினால் அப்போதும் அதை ஆதரித்து, சில வைதீக கும்பல்கள் தொலைக்காட்சி விவாதங்களில் நியாயப்படுத்தி பேசிக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பீமா கோரேகான் – எல்கர் பரிஷத் வழக்கு: சிறைப்படும் நீதி நூல் வெளியீடு



‘பீமா கோரே கான் - எல்கர் பரிஷத் வழக்கு: சிறைப்படும் நீதி’ நூல் வெளியீட்டு நிகழ்வு, 11.06.2022 மாலை 5.30 மணியளவில் சென்னை தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்றது. பீமா கோரே கான் அரசியல் சிறைப்பட்டோர் விடுதலைக் குழு ஏற்பாடு செய்த இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் சரசுவதி தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய பொதுச் செயலாளர் து.ராசா நிகழ்வில் பங்கேற்று நூலை வெளியிட்டுப் பேசினார். தமிழ்நாடு சிறுபான்மை நல வாரிய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு குடியரசு கட்சித் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.கு. தமிழரசன், வன்னி அரசு (வி.சி.க. துணைப் பொதுச் செயலாளர்) மற்றும் தி.வி.க. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர்கள் கருணானந்தம், அ. மார்க்ஸ், சிவக்குமார், நெல்லை முபாராக் (எஸ்.டி.பி.அய்), நாகூர் மீரான் (பி.எஃப்.அய்.), வழக்கறிஞர் ப.பா. மோகன் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றுப் பேசினர்.

முன்னதாக விரட்டுக் கலையைச் சார்ந்த ஆனந்த், தோழர்களுடன் அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராகப் பாடல்களைப் படினார். தி.வி.க. தோழர்கள் தபசி. குமரன், உமாபதி உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர். கோபால் நன்றி கூறினார். டி.எஸ்.எஸ். மணி வரவேற்புரையாற்றினார்.

**வழக்கு விவரம்:** 1818ஆம் ஆண்டு, பார்ப்பன மன்னன் பாஜிராவின் 28 ஆயிரம் பேர் கொண்ட பேஷ்வா படையை வெறும் 774 பேர் கொண்ட மஹர் ரெஜிமென்ட் படை விரட்டியடித்து வெற்றிவாகை சூடியது. இந்நிகழ்வை நினைவுகூரும் வகையில், 1927ஆம் ஆண்டு பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் அங்கு நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூணுக்கு சென்று வீரவணக்கம் செலுத்தினார். பேஷ்வாக்களின் வீழ்ச்சியையும் மஹர்களின் வெற்றியையும் கொண்டாடும். இந்நிகழ்வின் மூலமே ஜெய் பீம் எனும் முழக்கம் உருவாகியது. அன்று முதல் அங்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மக்கள் வீர வணக்கம் செலுத்தி வந்தனர்.

கடந்த 2018ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாளன்று 200ஆம் ஆண்டு வீரவணக்க நாளை சிறப்பிக்க வந்த பொது மக்கள் ஆர்.எஸ்.எஸ். பின்னணி கொண்ட இந்துத்துவ அமைப்பின் சம்பாஜி பீடே, மிலிந்த் எக்போடே ஆகியோர் தலைமையில் மிகப் பெரிய வன்முறை திட்டமிட்டு நடத்தப்படுகிறது. இச்சம்பவத்தினை உலகமெங் கும் உள்ள தலைவர்கள், தங்களது கடுமையான கண்டனத்தை பல்வேறு வகையில் தெரிவித்தனர். இருப்பினும் இக்கலவரத்திற்கு காரணமான சம்பாஜி பிடே கைது செய்யப்பட வில்லை. மற்றொரு குற்றவாளியான மிலின் எக்போட்டே கைது செய்யப்பட்டு உடனே விடுதலை செய்யப்பட்டார். இச் சம்பவத்தை மூடி மறைக்க குற்றவாளிகள் தரப்பில் 8.1.2018 அன்று எதிர் மனு பெற்றுக் கொண்டு 31.12.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றவர்களின் தூண்டுதலால் வன்முறை ஏற்பட்டதாக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அம்பேத்கர் அவர்களின் பேத்தியின் கணவர் ஆன ஆனந்த் டெல்டும்டே, கவிஞர் வரவரராவ், கௌதம் நவ்லாகா, சுதாபரத்வாஜ், ஸ்டேன் சுவாமி உள்ளிட்ட பதினாறு பேரை, பொய் வழக்கு ஜோடித்து மாவோயிஸ்ட்டுகளுடன் தொடர்பு உள்ளவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதற்காக சோதனை என்னும் பெயரில் அவர்களின் கணினிகள், கைபேசிகள், அனைத்தையும் கைப்பற்றி சர்வதேச இராணுவரீதியிலான புதிய மென் பொருட்கள் மூலம் ஊடுருவப்பட்டு குற்றவாளிகளாக சித்தரிக்கப்பட்டனர். ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கடந்த காலங்களில் அரசு ஊழியர்களாகவும், பேராசிரியர்களாக வும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். மகளிர் மற்றும் பழங்குடி மக்களின் நலனின் செயல்பாட்டாளர்களாகவும் சிறந்து விளங்கியவர்கள். அதில் ராஜபுத்திரர், மராத்தியரும் இடம் பெற்றிருந்தனர்.

அவர்களுக்கு சிறையில் அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ சிகிச்சிகளும் மறுக்கப்படுகின்றன. அருட்தந்தை ஸ்டேன் சுவாமி குற்றம் நிரூபிக்கப்படாமலேயே நீதிமன்ற காவலில் இறந்து போனார்.

இந்நிலையில் மத்திய பா.ஜ.க. அரசு தேசிய புலனாய்வு அமைப்பு இந்த வழக்கை மராட்டிய மாநில அரசின் ஒப்புதலின்றி ஊ.பா. (UAPA) சட்டத்தின் கீழ் தேசிய புலனாய்வு முகமை விசாரணை மேற்கொண்டு வருகிறது. இதனை தற்போதைய மராட்டிய சிவசேனா - தேசிய வாத காங்கிரஸ் கூட்டணி அரசின் அமைச்சர்கள் முதல் பல்வேறு எதிர்கட்சியினர் கடும் கண்டனங்களை தெரிவித்தும் பா.ஜ.க. அரசு தனது பாசிச போக்கை நிறுத்திக் கொள்ளாமல் கள்ள மவுனம் சாதித்து வருகிறது. இவர்களுக்கான நீதியும் மறுக்கப்பட்டு வருகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th June 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN